[31st March 1969

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 31—3—68 தேதி அன்றைய நிலவரப்படி, 2 சதவீதத்திலிருந்து 7 சதவீதம் வரை பங்குத் தொகையிலும், தணிக்கைக் கட்டண வகையிலும் சமய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த மொத்தத் தொகை ரூ. 27,85,706-23.

திரு. என். சுந்தரேசத் தேவர்: பிற மத நிறுவனங்களிலும் இப்படிப்பட்ட தொகை வாங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : வேறு மதங்கள் சம்பந்தப்பட்ட தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

*Loan given by the Life Insurance Corporation of India.*

* 334 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the amount given by the Life Insurance Corporation of India to Government of Tamil Nadu to extend Housing facilities in the financial years 1966–67, 1967–68 and 1968–69?

வீட்டு வசதிக்காக ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் கடன்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாடு அரசுக்கு வீட்டு வசதிக்காக 1966–67, 1967–68, 1968–69-ஆம் நிதி ஆண்டுகளில் இந்திய ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் எவ்வளவு பணம் கொடுத்தது ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :

1966–67 ரூ. 125 லட்சம்.

1967–68 ரூ. 150 லட்சம்.

1968–69 ரூ. 150 லட்சம்.

*Retirement age of Electricity Board Employees.*

* 335 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it has been decided to reduce the age of retirement of employees and officers of the State Electricity Board from 58 years to 55 years; and

(b) if so, the number of persons who will lose their employment thereby ?

மின்சார வாரிய ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மின்சார வாரிய ஊழியர்கள், அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 55 ஆக குறைக்க தீர்மானிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், இதனால் எத்தனை பேர் வேலை இழக்க நேரிடும் ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : (அ) ஆம்.

(இ) பதவியிலிருந்து ஓய்வு பெறும் வயதை 58-ல் இருந்து 55-ஆகக் குறைத்ததன் விளைவாக தமிழ்நாடு மின்சார போர்டில் 5—8—68 வரை பதவியிலிருந்து ஓய்வு அளிக்கப்பட்ட தொழில் நுட்ப, தொழில் நுட்பமில்லா பணியாளர் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

தொழில் நுட்பப் பணியாளர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | மின்சாரத் தலைமைப் பொறியாளர் .. | ஒருவர். |
| 2 | கூட்டுத் தலைமைப் பொறியாளர் (மின்சாரம்). | ஒருவர் |
| 3 | சிறப்புத் தலைமைப் பொறியாளர் (எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம்). | ஒருவர். |
| 4 | மேற்பார்வைப் பொறியாளர்—மின்சாரம் .. | பதினாறுபேர். |
| 5 | மேற்பார்வைப் பொறியாளர்—கட்டிடம் .. | இருவர். |
| 6 | கோட்டப் பொறியாளர்கள்—மின்சாரம் .. | நால்வர். |
| 7 | கோட்டப் பொறியாளர்—இயந்திரவியல் .. | ஒருவர். |
| 8 | உதவிப் பொறியாளர்கள்—மின்சாரம் .. | பதினேழு பேர். |
| 9 | உதவிப் பொறியாளர்—இயந்திரவியல் .. | ஒருவர். |
| 10 | உதவிப் பொறியாளர்—கட்டிடம் .. .. | ஒருவர். |

தொழில் நுட்பமில்லா பணியாளர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | தலைமைக் கணக்கர்கள் .. .. .. | ஐவர். |
| 2 | தனி உதவியாளர்கள் .. .. .. | இருவர். |
| 3 | பண்டகசாலை மேற்பார்வையாளர் .. .. | ஒருவர். |
| 4 | துணைத் தலைமைக் கணக்கர்கள் .. .. | எண்மர். |

சென்ற ஆண்டு 6—8—68-லிருந்து டிசம்பர் முடிய மேலும் பதினொரு பொறியாளர்களும் துணைத் தலைமைக் கணக்கர் ஒருவரும் ஓய்வு பெற்றார்கள்.

THIRU D. SANTOSHAM : Has the reduction in the age limit for retirement been given effect to in respect of all cadres of employees from top to bottom or has it been given effect to only below a certain level ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : போர்டிலே முடிவு செய்யப்பட்ட சில குறிப்பிட்ட உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு மட்டும் கணக்கிடப் பட்டிருக்கிறது. புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

*Pudukkottai Forest Area*

* 299 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it was proposed to establish an agricultural farm by the denudation of forests in the Pudukkottai forest region ; and

(*b*) whether teak, eucalyptus and cashew have been cultivated in this region ?